No. of Printed Pages : **4**

**7487**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# Part III — Vocational Subjects

(Engineering and Technology Area)

# நெசவியல் தொழில்நுட்பம்

# TEXTILE TECHNOLOGY

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ]                    [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** ஸ்ட்ரைப்பர்கள் எனப்படுபவை :

(அ) கேம்கள் (ஆ) ஊசிகள் (இ) ஃபீடர்கள் (ஈ) சிங்கர்கள்

**2.** உள்ளாடை வட்டக்கழுத்து கை இல்லாத பனியன் எது ?

(அ) ட்ரங்க்ஸ் (ஆ) RNS Vest (இ) கார்டிகன் (ஈ) RN Vest

**3.** ''விடுபட்ட தையல்'' எனப்படுவது :

(அ) மடிப்புத் தையல் (ஆ) சாதா தையல்

(இ) மிதப்புத் தையல் (ஈ) பின்னல் தையல்

[ திருப்புக

4. காம்பவுண்ட் ஊசியில் கொக்கியை மூடித் திறப்பது :
(அ) பிரஸ்ஸர் (ஆ) லாட்ச் (இ) முனை (ஈ) டங்க்

5. தறியின் முதன்மை இயக்கங்கள் எத்தனை ?
(அ) 4 (ஆ) 2 (இ) 5 (ஈ) 3

6. ஓர் அங்குலத்தில் உள்ள ஊடை நூல்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் சக்கரம் :
(அ) பீம் வீல் (ஆ) ஸ்டட் வீல் (இ) சேன்ஜ் வீல் (ஈ) ராட்செட் வீல்

7. கூடு போன்ற அமைப்பை ஏற்படுத்தும் நெசவு :
(அ) மாக்லினோ (ஆ) டுவில் (இ) ஹக்-அ-பேக் (ஈ) ஹனிகோம்ப்

8. ஊடை நூல் அறுந்துவிட்டால் தறியை நிறுத்தும் அமைப்பு :
(அ) பிக்கிங் (ஆ) புணி திறத்தல்
(இ) வெஃப்ட் போர்க் இயக்கம் (ஈ) லெட் ஆப் மோஷன்

9. செயற்கை இழைகளைச் சாயமிட ஏற்ற சாயம் :
(அ) நேப்தால் சாயம் (ஆ) நேரடிச் சாயம்
(இ) டிஸ்பர்ஸ் சாயம் (ஈ) அமிலச் சாயம்

10. நிறமிக் கோட்பாட்டின்படி முதன்மை நிறங்கள் :
(அ) சிவப்பு, மஞ்சள், பச்சை (ஆ) சிவப்பு, பச்சை, நீலம்
(இ) சிவப்பு, நீலம், ஆரஞ்சு (ஈ) சிவப்பு, மஞ்சள், நீலம்

11. வேட் சாயத்தின் வேறு பெயர் :
(அ) புரோசியான் சாயம் (ஆ) தொட்டிச் சாயம்
(இ) அமிலச் சாயம் (ஈ) ரியாக்டிவ் சாயம்

12. தடிமனான துணிகள் தயாரிக்கப் பயன்படும் நாடா இல்லாத தறி :
(அ) புரஜெக்டைல் (ஆ) ஏர் ஜெட்
(இ) வாட்டர் ஜெட் (ஈ) ரேப்பியர்

13. மைய அழுத்த உருளை எதனால் ஆனது ?
(அ) துத்தநாகம் (ஆ) தாமிரம் (இ) மரக்கட்டை (ஈ) இரும்பு

**14.** பதிக் அச்சு முறையில் பயன்படும் சாயம் :

(அ) நாப்தால் சாயம் (ஆ) வேட் சாயம்

(இ) டைரக்ட் சாயம் (ஈ) ரியாக்டிவ் சாயம்

**15.** டேபர் என்பது :

(அ) ஸ்டென்சில் (ஆ) உருளை

(இ) டிசைன் உருளை (ஈ) வழிப்பான்

## பகுதி - II

குறிப்பு : **எவையேனும் 10** வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

**16.** பாஸிட்டிவ் உட் செலுத்தும் அமைப்பு – குறிப்பு வரைக.

**17.** சிங்கரின் பணிகள் மூன்றினைக் கூறுக.

**18.** பின்னல் நூலின் பண்புகள் யாவை ?

**19.** முகப்பு வளையம், பின் வளையம் – குறிப்பு வரைக.

**20.** டுவில் நெசவின் வகைகள் யாவை ?

**21.** விசைத்தறியின் முதன்மை மற்றும் இணை இயக்கங்கள் யாவை ?

**22.** ஜக்கார்டு இயந்திரத்தின் அவசியம் யாது ?

**23.** டிஸ்பர்ஸ் சாயமிடும் முறைகள் யாவை ?

**24.** நீல நிறத்தின் தன்மைகள் யாவை ?

**25.** வேட் சாயத்தின் பண்புகள் ஏதேனும் மூன்றினை எழுதவும்.

**26.** நிறம் நீக்கும் பாணி என்றால் என்ன ?

**27.** அட்டை ஸ்டென்சில் தயாரித்தலைப் பற்றி எழுதுக.

**28.** ஸ்கிரீன் அச்சிடும் இயந்திரங்களின் பயன்கள் மற்றும் வகைகளை எழுதுக.

[ திருப்புக

## பகுதி - III

**குறிப்பு :** **எவையேனும் 5** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

**29.** லாட்ச் ஊசி, பியர்டட் ஊசி இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

**30.** கீழ்க்கண்ட நெசவு டிசைனை வரைகட்டத்தாளில் வரைந்து டிராப்ட், பெக் பிளான் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

ஹனிகோம்ப் $10 \times 10$

**31.** பருத்தி நூலிற்கு குளிர்முறை ரியாக்டிவ் சாயமிடுதலை விளக்குக.

**32.** நாடாத் தறி, நாடா இல்லா தறி – ஒப்பீட்டு அட்டவணை தருக.

**33.** கைக்கட்டையைப் பயன்படுத்தி அச்சிடும் செயலை விளக்குக.

**34.** பின்னல் துணியில் ஏற்படும் பொதுவான குறைபாடுகளை விளக்கவும்.

**35.** சார்பு இயக்கங்கள் யாவை ? அவை ஒவ்வொன்றைப் பற்றியும் குறிப்பு வரைக.

## பகுதி - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். தேவையான இடங்களில் படம் வரையவும். **2x10=20**

**36.** (அ) லாட்ச் ஊசி இயங்கு நிலைகளைப் படங்களுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) விசைத்தறியில் 7 சக்கரத் துணி சுற்றும் இயக்கம் செயல்படும் விதத்தைப் படத்துடன் விளக்குக.

**37.** (அ) ஸ்டாண்ட்ஃபாஸ்ட் மோல்டன் மெட்டல் முறையில் வேட் சாயம் தோய்த்தலை விளக்குக.

**அல்லது**

(ஆ) பல வண்ண உருளை அச்சிடும் இயந்திரம் செயல்படும் முறையை விளக்குக.

**- o O o -**